# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

Sessions Case No.43/2023

Deposition of witness – PW6

| | | | |
|---|---|---|---|
| Name | : டாக்டர் ராஜன் | Caste | : |
| S/o. | : தங்கராசு | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed on 12.11.2025 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

Accused present.

முதல் விசாரணை;

நான் தற்போது ஆத்தூர் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 18.8.2022ம் தேதி இரவு 12.10 மணிக்கு அதே மருத்துவமனையில் பணியில் இருந்தபோது செந்தில்குமார், த/பெ.சடையன் என்ற நபரை 108 ஆம்புலன்சில் அவரது உறவினர் அழைத்து வந்தார். அவரை ஒரு நபர் கையாலும் மரக்கட்டையாலும் தாக்கியதாக கூறினார். அவரை விசாரித்து விபத்து பதிவேடு நகல் பதிவு செய்தேன்.

1. அவருக்கு இடது கண் புருவத்திற்கு மேல் ஒரு வெட்டுக்காயம் காணப்பட்டது.
2. தலையில் வீக்கம் காணப்பட்டது.

அவர் ஏற்கனவே இரண்டு கால்களும் செயல் இழந்த முதுகுதண்டுவடம் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி என்பதை சான்றிதழில் பதிவு செய்தேன். அவரை உள்நோயாளியாக அனுமதித்தேன். 22.8.2022 வரை உள்நோயாளியாக அவர் சிகிச்சை பெற்றார். பின்னர் அவரது இதய துடிப்பு, சுவாசம், மற்றும் ரத்த மாதிரி அறிக்கை அனைத்தும் நார்மல் அளவில் இருந்தது. அவருக்கு ஏற்பட்ட காயங்கள் நன்றாக ஆறி இருந்தது. அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயம் என்று நான் சான்று வழங்கினேன். நான் பதிவு செய்த விபத்து பதிவேடு மற்றும் காயச்சான்றிதழ் அ.சா.ஆ.3 ஆகும். ஒரு நபரை கட்டையால் தாக்கும்போது நான் மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் சிகிச்சை அளித்த நபர் சக்கர நாற்காலியில் இருந்து தவறி விழும்போது கூட நான் மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரி.

மறுவிசாரணை இல்லை. Sd/- S.Sumathy,

Principal Sessions Judge, Salem.